திரு. தி. பொன்னுமலை : தற்போது மின் கம்பங்களுக்கு நிறைய கிராக்கி இருக்கிறது. ஆகவே தாலுகாவிற்கு ஓர் இடத்தில் தனியார் துறையில் மின் கம்பங்கள் தயாரிப்பதற்கு அனுமதி வழங்க முடியுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தாலுகாவிற்கு ஓர் இடத்தில் என்று இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கு 16,50,000 மின் கம்பங்கள் நமக்குத் தேவைப்படுகின்றன. இப்போது நம் மின்சார வாரியத்தின் மூலமாகவே பல கம்பங்கள் செய்து வருகிறார்கள். தனியார் காண்ட்ராக்ட் மூலம் செய்து வருகிறார்கள். அவற்றைத் தயாரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு தாலுகாவிற்கும் எவ்வளவு என்று பிரித்து கொடுக்கலாமோ அதைச் செய்யலாம்.

Workers in State Undertakings

* 302 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is proposed to bring the workers in State Undertakings under the purview of the Workmen's Compensation Act;

(b) whether the views of the Heads of Departments have been obtained in the matter; and

(c) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : (அ) 1923-ஆம் ஆண்டு தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளபடி தொழிலாளர் எவரேனும் காயமுற்றால் அவர் வேலை செய்து வந்த நிறுவனம், பொது நிறுவனமாயிருந்தாலும் சரி அல்லது தனியார் நிறுவனமாயிருந்தாலும் சரி மேற்படி சட்டத்தின் விதித்துறைகள் அவருக்குப் பொருந்தும்.

(இ) & (உ) இவ்வினக்கள் எழவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இது விஷயமாக அரசாங்கத் தொழில் ஸ்தாபனமாகட்டும் அல்லது தனியார் தொழில் ஸ்தாபனமாகட்டும் எல்லோருக்கும் ஒருவிதமான சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது பற்றிப் பாராட்டுகிறேன். இது மாதிரி தொழிலாளர்களுக்குள்ள உரிமைகள் எல்லாம் இந்த இரண்டு ஸ்தாபனங்களில் உள்ள தொழிலாளர்களுக்கும் மேலும் அமலுக்குக் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : அப்படித்தான் அமல் செய்யப்படுகிறது.